வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 25.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

25ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினமான நாளை, லடாக் யூனியன் பிரதேசத்தின் டிராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவுச் சின்னத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

வளர் இளம் பருவத்தினர் நலனில் கூடுதல் முதலீடு செய்வதன் பொருளாதாரப் பலன்கள் பற்றிய அறிக்கையை, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா, புதுடெல்லியில் இன்று வெளியிட்டார்.

கேரளத்தில், நிப்பா வைரஸ் தாக்குதலுக்கு சிறுவன் பலியானதை தொடர்ந்து, புதுச்சேரி மாநிலத்தில் இந்நோயை தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

புதுச்சேரியில், தொடர் நோயினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 281பேருக்கு, நிதி உதவி வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

---

*கார்கில் (12)*

நாளை, கார்கில் வெற்றி தினத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழாவை ஒட்டி, லடாக் யூனியன் பிரதேசத்தின் டிராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர்

நினைவுச் சின்னத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி மலர் அஞ்சலி செலுத்துகிறார். கடல் மட்டத்தில் இருந்து 15 ஆயிரத்து 800 அடி உயரத்தில் உள்ள நீமு-தர்ச்சா சாலையில், ஷிங்குன் லா இரட்டைக் குழல் சுரங்கப் பாதை அமைக்கும் பணிகளையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். இந்த சுரங்கப் பாதை, லடாக் பகுதியின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும், பாதுகாப்புப் படையினரின் போக்குவரத்துத் தேவைகளுக்கும், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, 1999ஆம் ஆண்டு கார்கில் வெற்றியை கொண்டாடும் வகையில், டிராஸ் பகுதியில் உள்ள லமோச்சென் முனையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் ராணுவத்தினர், ராணுவ வீரர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் கலந்து கொண்டனர்.

---------------------------------

விவாதம் 1 (18)

மக்களவையில், இன்று மத்திய பட்ஜெட் மீதான விவாதங்கள் தொடர்ந்து இடம்பெற்றன. காங்கிரஸ் உறுப்பினர் திரு. சந்திரஜீத் சிங் சன்னி, விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், பஞ்சாப்பிற்கு நிதி ஒதுக்குவதில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு செயல்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி அளிப்புத் திட்ட பயனாளிகளுக்கு, கூலி ஏன் உயர்த்தப்படவில்லை என்றும் அவர் வினவினார். முன்னாள் பஞ்சாப் முதலமைச்சர் பியாந்த் சிங் படுகொலை குறித்து திரு. சன்னி வெளியிட்ட சில கருத்துக்கள் தொடர்பாக,

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்கட்சிஉறுப்பினர்களுடம் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதை தொடர்ந்து அவையின் அலுவல்கள் முதலில், பிற்பகல் 2 மணி வரையிலும், பின்னர், 3 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில்தான், மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் அதிகபட்ச வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுனில் தட்கரே விவாதங்களில் பங்கேற்று பேசுகையில் கூறினார். மாநிலங்களுக்கு இடையில் பிளவு ஏற்படுத்தும் பட்ஜெட்டாகவே மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. சௌகத் ராய் குற்றம்சாட்டினார். மாணவர்களுக்கான கல்விக் கடன் திட்டம், மேற்குவங்க அரசுத் திட்டத்தின்

விவாதம் 2 (7)

அச்சுப் பிசகாத நகல் என்று அவர் குறிப்பிட்டார். மாநிலங்களவையில், காங்கிரஸ் உறுப்பினர் திரு. ரன்தீப் சிங் சுர்ஜே வாலா, ஆம் ஆத்மி உறுப்பினர் திரு. ராகல் சத்தா, பிஜேடி உறுப்பினர் திரு. தேபாசிஷ் சமந்த்ரே, ஆர்ஜேடி உறுப்பினர் திரு. சஞ்சய் யாதவ், பாரதீய ஜனதாவைச் சேர்ந்த திருமதி மேதா குல்கர்னி, திமுக உறுப்பினர் திரு. என். ஷண்முகம், அஇஅதிமுக உறுப்பினர் திரு. சி.வி. ஷண்முகம் உள்ளிட்டோர், பட்ஜெட் மீதான விவாதங்களில் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர்.

---------------------------------

அணுசக்தி (7)

நாட்டில் மொத்தம் 13 ஆயிரத்து 300 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 21 அணுமின் நிலையங்களை அமைக்கும் பணிகள், வெவ்வேறு கட்டடங்களில் உள்ளதாக, பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று, மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். நாட்டில் தற்போது, மொத்தம் 8 ஆயிரத்து 180 மெகாவாட் திறன் கொண்ட 24 அணுமின் நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும், 2032ஆம் ஆண்டிற்குள் இது, 22 ஆயிரத்து 480 மெகாவாட்டாக அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

---------------------------------

நீதிமன்றம் (7)

நாட்டின் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான 410 போக்சோ நீதிமன்றங்கள் உட்பட, மொத்தம் 755 சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருவதாக, மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், இன்று மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். இத்தகைய நீதிமன்றங்களில் இதுவரை சுமார் 2 லட்சத்து 53 ஆயிரம் வழக்குகள் விசாரித்து தீர்ப்பு வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

---------------------------------

*தபால் நிலையம்* (9)

நாட்டில், தபால் நிலையங்கள் மூலமான ஆயிரத்து 13 ஏற்றுமதி மையங்களை அரசு செயல்படுத்தி வருவதாக, மத்திய தகவல் தொடர்புத் துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் சிறு-குறு நிறுவனங்களின் ஏற்றுமதி தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இம்மையங்கள் அமைந்து இருப்பதாக அவர் கூறினார். நாட்டில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில், 93 அஞ்சலக ஏற்றுமதி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உள்ள இத்தகைய மையங்களின் எண்ணிக்கை, 64.

---------------------------------

*முர்மு* (10)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுடெல்லியில், பிரசிடென்ட்ஸ் எஸ்டேட் பகுதியில் உள்ள கேந்திர வித்யாலயா பள்ளிக்கு நேரில் சென்று, 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பெடுத்தார். நவீன உலகின் பல்வேறு பிரச்சனைகள் குறித்து, அவர் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பருவநிலை மாற்றம், புவி வெப்பமயம் போன்ற பிரச்சனைகளை சமாளிக்க, மறு பயன்பாடு-மறு சுழற்சி-குறைந்த பயன்பாடு உள்ளிட்ட யுக்திகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். இதுபோன்ற பிரச்சனைகள் குறித்து, மாணவர்கள் அனைவரிடமும் எடுத்துக் கூறி, தீர்வுக்கு பங்களிக்க வேண்டும்

என அவர் கேட்டுக் கொண்டார். குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவியேற்று 2 ஆண்டுகள் ஆவதை ஒட்டி, இன்று, இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

---------------------------------

*ஜெய்சங்கர் (8)*

ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று, லாவோஸ் சென்றுள்ளார். லாவோஸ் நாட்டின் வியன்டியான் நகரில், பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை, இருதரப்பு ரீதியிலும் அவர் சந்திக்க இருக்கிறார். கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியக் கொள்கையின் பத்தாம் ஆண்டில் இந்தியா, ஆசியான் நாடுகள் உடனான உறவுகளை மேலும் ஆழப்படுத்திக் கொள்வதில், ஆர்வம் கொண்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

---------------------------------

*சுகாதாரம் (10)*

வளர் இளம் பருவத்தினரின் நல வாழ்வில் கூடுதல் முதலீடு செய்வதன் பொருளாதார பலன்கள் பற்றிய அறிக்கையை, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வெளியிட்டார். வளர் இளம் பருவத்தினருக்கு தேவையான எல்லா உதவிகளும், ஆதரவும் வழங்கப் படுவதை உறுதிப்படுத்த, மத்திய அரசு, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன் இணைந்து, முக்கிய

நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். புற்றுநோய் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு காரணமான ஹியூமன் பாப்பிலோமா வைரசுக்கு எதிராக விரைவில் தடுப்பூசி கொண்டுவரப்படும் என்றும், அவர் நமபிக்கை வெளியிட்டார்.

---------------------------------

*சுகாதாரம்-புதுச்சேரி* 1 (18)

கேரள மாநிலம் மலப்புரத்தில் அண்மையில் 14 வயது சிறுவன் நிப்பா வைரஸ் தாக்குதலுக்கு பலியானதை தொடர்ந்து, புதுச்சேரி மாநிலத்தில் இந்நோயை தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. கோரிமேடு நெஞ்சக நோய் மருத்துவமனையில், தனி வார்டு ஒதுக்கப் பட்டுள்ளது. நோய் கண்காணிப்புப் பணிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன. பொது மக்கள், பதனீர் போன்ற பனைமர பானங்களை தவிர்க்க வேண்டும் என்றும், கடிப்பட்ட பழங்களை உண்ணக் கூடாது என்றும், சுகாதாரத் துறை இயக்குநர் டாகடர் ஸ்ரீராமுலு கூறியுள்ளார். மூளைக் காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களிடம் இருந்து, சமூக இடைவெளி விட்டுப் பழகவும் அவர் அறிவுறுத்தி உள்ளார். மூளைக் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக முகக் கவசம் அணிவித்து, அருகில் உள்ள அரசு மருத்துவமனையை அணுக வேண்டும் என்றும், சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கிடையே, நிப்பா வைரஸ் நிலவரங்களை சமாளிக்க, புனேயில் இருந்து கேரளத்திற்கு அனுப்பப்பட்ட இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் நடமாடும் மருத்துவ

ஆய்வகம், இன்று, மலப்புரம் மஞ்சேரி மருத்துவக் கல்லூரிக்கு சென்று சேர்ந்துள்ளது. ஐசிஎம்ஆர் மருத்துவ நிபுணர்கள், மலப்புரம் மாவட்டம் பண்டிக்காடு பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு, சிறுவனுக்கு நிப்பா வைரஸ் தாக்குதல் ஏற்பட்டதற்கான

*சுகாதாரம்-புதுச்சேரி* 2 (3)

காரணங்களை ஆராய்ந்தனர். சிறுவனுடன் தொடர்பில் இருந்த 16 பேரின் உயிரியல் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப் பட்டதில், இவர்களில் எவருக்கும் நிப்பா வைரஸ் தாக்குதல் இல்லை என தற்போது தெரியவந்துள்ளது.

----------------------------------

*புதுச்சேரி உதவி* (9)

புதுச்சேரியில், தொடர் நோயினால் பாதிக்கப் பட்டுள்ள நோயாளிகளின் மருத்துவ செலவுக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் மாதம் 3 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 183 புதிய பயனாளிகள் உட்பட, 2 ஆயிரத்த 281 பயனாளிகளுக்கு, மொத்தம் சுமார் 1 கோடியே 57 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், துறை இயக்குநர் திரு. இளங்கோவன், மற்றும், இதர அதிகாரிகள் உடன் இருந்தனர்.

----------------------------------

ஷண்முகம் (6)

புதுச்சேரியில், சுயமரியாதைச் சுடர் எம்எ ஷண்முகம் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. மரப்பாலம்-புவன்கரே வீதி சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமிகாந்தன், திரு. சம்பத் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---------------------------------

திரைப்பட விழா (5)

55 மற்றும் 56ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாக்களுக்கான விழா இயக்குநராக, புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் சேகர் கபூர் நியமிக்கப் பட்டுள்ளார். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம், இதற்கான உத்தரவை வெளியிட்டுள்ளது. 55 ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, வரும் நவம்பர் 20 முதல், 28ஆம் தேதி வரை, கோவாவில் நடைபெற உள்ளது.

---------------------------------

*சமுதாய வானொலி (16)*

மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மிசோரம் முதலமைச்சர் திரு. லால்துஹோமா ஆகியோர் முன்னிலையில், நாட்டின்

500ஆவது சமுதாய வானொலியை, காணொலிக் காட்சி மூலம் தொடக்கி வைத்தார். அப்னா ரேடியோ என்னும் இந்த பண்பலை சமுதாய வானொலி, ஐஸ்பாலில் உள்ள இந்திய வெகுஜனத் தொடர்பு கழகத்தில் அமைக்கப் பட்டுள்ளது. புதிய வானொலி, அதன் ஒலிபரப்புப் பகுதியில் உள்ள மக்களின் வாழ்வில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும், கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கையிலும் இது முக்கிய மைல்கல்லாக அமையும் என்றும், அமைச்சர் தெரிவித்தார். மிசோரம் உட்பட வடகிழக்கு மாநிலங்களின் ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்த, மத்திய பட்ஜெட்டில், அதிக நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக, அவர் கூறினார். வர்த்தக நோக்கம் ஏதுமின்றி, கடைக் கோடி மக்கள் வரை, தகவல்களை கொண்டு செல்வதே சமுதாய வானொலியின் குறிக்கோள் என்றும், தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறினார். சமுதாய வானொலி நிலையங்களுக்கான 10ஆவது தேசிய விருதுகளும், இந்நிகழ்ச்சியின் போது அறிவிக்கப்பட்டன.

---------------------------------

வானிலை (9)

கொங்கண், கோவா மற்றும் மத்திய மஹாராஷ்ட்ராவில் அடுத்த 2 நாட்களுக்கு அதி கனமழை தொடரும் என, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. சௌராஷ்ட்ரா, விதர்பா, மராத்வாடா உள்ளிட்ட பகுதிகளில் இன்றைய தினமும், மத்திய பிரதேசத்தில் நாளை வரையிலும், மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளை

வரை, வடக்கு உட்புற கர்நாடகத்திலும், வரும் 27ஆம் தேதி வரை, கடலோர மற்றும் தெற்கு உட்புற கர்நாடகத்திலும் மிக கனமழை எதிர்பார்க்கப் படுகிறது. வடஇந்தியாவில், இன்று கிழக்கு ராஜஸ்தானிலும், வரும 26-27ஆம் தேதியிலும் மிக கனமழை இருக்கலாம் என வானிலை ஆய்வுத் துறை மேலும் தெரிவித்துள்ளது.

---------------------------------

*அமர்நாத் (8)*

ஜம்மு-காஷ்மீரில், அனந்தநாக் பகுதியில் உள்ள அமர்நாத் குகைக் கோவிலில், இவ்வாண்டு இதுவரை, 4 லட்சத்து 25 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர். இன்றைய தினம், 3 ஆயிரத்து 89 பேர் அடங்கிய 28ஆவது அமர்நாத் யாத்திரைக் குழு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், ஜம்முவில் உள்ள பகவதி நகர் யாத்திரை நிவாசில் இருந்து, பஹல்காம் மற்றும் பல்ட்டால் அடிவார முகாம்களுக்கு புறப்பட்டு சென்றுள்ளது. ஜம்மு-காஷ்மீரில், கடந்த ஜூன் 28ஆம் தேதி தொடங்கிய, 52 நாள் அமர்நாத் யாத்திரை, ஆகஸ்ட் 19ஆம் தேதி வரை நடைபெறும்.

---------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

25ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினமான நாளை, லடாக் யூனியன் பிரதேசத்தின் டிராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவுச் சின்னத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

வளர் இளம் பருவத்தினர் நலனில் கூடுதல் முதலீடு செய்வதன் பொருளாதாரப் பலன்கள் பற்றிய அறிக்கையை, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா, புதுடெல்லியில் இன்று வெளியிட்டார்.

கேரளத்தில், நிப்பா வைரஸ் தாக்குதலுக்கு சிறுவன் பலியானதை தொடர்ந்து, புதுச்சேரி மாநிலத்தில் இந்நோயை தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

புதுச்சேரியில், தொடர் நோயினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 281பேருக்கு, நிதி உதவி வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.